[9th September 1960

Fowls

* 570 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசீய அபிவிருத்தித் திட்டப் பிரதேசத்திலுள்ள எத்தனை கிராமங்களிலே கோழிகளின் தரத்தை உயர்த்த பரீட்சார்த்த திட்டங்கள் நடத்தப்பட்டன ?

(ஆ) இத் திட்டத்தின் மூலமாக ஏற்பட்ட பலாபலன்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Twenty-one Poultry Extension Centres have been set up under the scheme for the development of Poultry in Community Development/National Extension Service areas during the Second Five-Year Plan period. Each Centre covers an area, within a radius of 5 miles, comprising of one or more villages.

(*b*) From these centres 46,521 eggs were sold for hatching and 18,083 eggs for table. Twelve thousand, five-hundred and thirty-four eggs were used for hatching in these centres. Three-hundred and nineteen birds were distributed in the surrounding areas. These centres are serving as demonstration poultry farms for educating the villagers on the scientific methods of poultry husbandry.

SRI P. G. MANICKAM : ஸார், இவ்விதப் பரீட்சார்த்தத் திட்டங்களானது எல்லா ப்ளாக்குகளிலும் நடைபெறுவதில்லை. எல்லா ப்ளாக்குகளிலும் இப்படிப்பட்ட பரீட்சார்த்த திட்டங்களை நடத்தும்படி சர்க்கார் உத்தரவு பிறப்பிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் திட்டத்தை எல்லாப் பிராந்தியங்களிலும் நடத்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

SRI A. A. RASHEED : As there is shortage of fowls and eggs in our State, will the Government consider the desirability of stopping the export of these fowls to Ceylon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may put a separate question.

Subsidy (Wells)

* 571 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959–60-ல் விவசாயிகளுக்கு மான்யமாகவும் கடனாகவும் கொடுக்கப்பட்ட 1,000 ரூபாயில் விவசாயக் கிணறு வெட்டும் வேலையைப் பூர்த்தி செய்யாமலிருப்பவர்கள் எத்தனை பேர்கள் ?

(ஆ) இக் கிணற்று வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாதவர்களுள் எத்தனை பேர்கள் மறுபடியும் கடன் தொகை தேவையென்று சர்க்காருக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள் ?

(இ) இவர்களுள், எத்தனை பேர்களுக்கு மறுபடியும் கடனுதவி அளிக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The information cannot be had at present because an assessment of the actual number of well works incomplete under the 1958–59 and 1959–60 scheme will be made only by about the end of September 1960, while

9th September 1960]

that under the 1959–60 and 1960–61 scheme will be made by about January 1961, having regard to the last dates for completion of wells under the scheme.

(*b*) & (*c*) Do not arise.

SRI P. G. MANICKAM : சென்ற வருஷம் ஆயிரம் ரூபாய் கொடுக்கப் பட்டதில் இணற்று வேலை பூர்த்தியடையாததனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்களிடமிருந்து அந்தத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது. ஆனால், இந்த வருஷம் 1960–61-ல் இரண்டாயிரம் ரூபாய் கடனாகவும், 500 ரூபாய் மானியமாகவும் கொடுக்கப்படுகிறது. 1959–60-ல் கடன் கொடுத்து வேலை பூர்த்தியாகாமல் இருப்பவர்களிடமிருந்து அந்தத் தொகையைத் திரும்பப் பெறாமல் அந்த வேலை பூர்த்தியாகும் அளவுக்கு மேலும் கடன் தொகை அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தந்த வருஷத் திட்டத்தின்படி அது அமுல் நடத்தப்படுகிறது. இதில் ஏதாவது கஷ்டம் இருப்பதாகத் தெரியப்படுத்தினால் அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு வேண்டிய பரிகாரம் அளிக்கப்பட்டு வருகிறது.

Strike

*572 *Q.*—SRI P. S. CHINNADURAI :
SRI A. VEDARATHNAM :
SRI N. K. PALANISAMI :
SRI S. PAKKIRISAMI PILLAI : } : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா :—

(அ) 1960, ஜூலை மாதம் 11-ம் தேதி நள்ளிரவு முதல் நடைபெற்ற மத்திய சர்க்கார் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின்போது இந்த ராஜ்ய சர்க்காருக்கு பணச் செலவு ஏற்பட்டதா ?

(ஆ) அப்படியானால், எவ்வளவு தொகை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The expenditure incurred on the various measures taken by the State Government to protect Central Government properties and vital installations, and loyal workers and their families, and to maintain essential services, during the recent strike by the Central Government employees, is being reimbursed by the Government of India. Full details of the expenditure incurred have not yet been received, but the expenditure so far reported is about Rs. 3½ lakhs.

SRI A. VEDARATHNAM : ஸார், இந்த வேலை நிறுத்தத்தினால் சர்க்காருக்கு ஏற்பட்ட செலவை ஏழைகள் வரிப் பணத்திலிருந்து சரிக்கட்ட யோசித்திருக்கிறதா அல்லது இந்த வேலை நிறுத்தத்தை தூண்டிய கட்சிக்காரர்களிடமிருந்து வசூலிக்க உத்தேசித்திருக்கிறதா ? பல அரசியல் கட்சிக்காரர்களுக்கு வெளி நாடுகளிலிருந்து அதிகமான பணம் வருகிறது. அந்தப் பணத்திலிருந்து இது சரிக்கட்டப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கம் செலவு செய்வது, எதிர் பார்க்கப்பட்ட செலவு, எதிர்பாராத செலவு நியாயமான செலவு, அநியாயமான செலவு எல்லாம் ஏற்படும். எந்தச் செலவானாலும் மக்கள் வரிப் பணத்திலிருந்து தான் செலவழிக்கப்படுகிறது. ஆனால் அங்கத்தினர் சொல்வது போல் ஏதாவது பிரத்தியேகமாக வசூலிக்க வழி இருக்கிறது. இதிலே அந்த முறை கையாளப்படுவதற்கு இடம் இல்லை.